92

புத்தர்

OFFICE OF THE
Q4:33
N50
68789

THE BUDDHA

The Registrar of Books

by

BHIKKHU SOMANANDA

Q24:33

Maha Bodhi Ashram,

MADRAS 11, INDIA.

A portion of the cost of this publication was borne by Mr. M. G. TISSERA of Iddamalgoda, Getahetta, Ceylon.

Price Annas Four

Printed in India
Sri Ramachandra Printing Works,
177, Royapettah High Road,
Madras 14. 24-10-1950

To

Sri Devapriya Valisinha, B.A.,

General Secretery, Maha Bodhi Society of India

and Ceylon

as

an expression

of

friendship and gratitude.

முன்னுரை

நிர்வாண மோக்ஷம் என்கிற பேரின்பத்தை அடைவதற்காக புத்தபோதி, பச்சேகபோதி, அரஹந்தபோதி என்கிற மூன்று விதமான போதிகளுள் ஒன்றை அடையவேண்டும் என்றும், இவைகளுள் புத்தபோதியே முதல்தரமானது என்றும், பகவான் கௌதம புத்தர் தமது பூர்வ ஜன்மங்களிலே செய்த பாரமீ தர்மங்களின் பயனாகத் தமது கடைசி ஜன்மத்திலே புத்தபோதியை அடையப் பெற்றார் என்றும் இச்சிறு புத்தகத்திலே விவரித்து உள்ளன. போதியை யடைந்த பகவான் கௌதமர், அதே அரச மரத்தின் கீழே ஒருவாரம் வரையில் ஸமாபத்திச் சுகம் அநுபவித்துக் கொண்டே யிருந்தார்.

"பல நிப்பாணஜங் ஸேரீ
ஸேவமானோ ரஸுத்தமோ
போதிமூலே வஸீ ஸத்த
திவஸானி விநாயகோ"

இதனை நினைவுறுத்தற்காக மூவர்ணப்படம் ஒன்றை இப்புத்தகத்தின் வெளிப்பக்க அட்டையில் சேர்த்து இருக்கின்றோம்.

எல்லோரும் புத்தபோதியை யடையலாம். ஆனால், அதை ஒன்று அல்லது இரண்டு நாட்களில்

அடையமுடியாது. நீண்ட காலம் அநேக ஜன்மங்களிலே, மிகவும் முயற்சி செய்து பாரமீ தர்மங்களை அனுஷ்டித்த பிறகே போதியை யடைய முடியும்.

கௌதம புத்தரின் ஜீவிய சரித்திரமும் இதிலே விவரித்து இருக்கிறது.

இரண்டு வருஷத்திற்கு முன்பு இப்புத்தகத்தைப் பிரசுரித்தோம். அதைப் பார்த்தவர் அநேகம்பேர் அதை நல்லதென்று போற்றினார்கள். ஆகையினாலே, இப்போது, இதைச் சற்றுப் பெரியதாக விவரித்துப் பிரசுரிக்கின்றோம்.

நில்வக்கே ஸோமாநந்த
நாயக ஸ்தவிரர்

மஹாபோதி ஆச்ரமம்
மதராஸ் 11, இந்தியா.
24 - 10 - 50

பஞ்ச ஸீலம்

நமோ தஸ்ஸ பகவதோ அரஹதோ
ஸம்மா ஸம்புத்தஸ்ஸ

புத்தங் ஸரணங் கச்சாமி
தம்மங் ஸரணங் கச்சாமி
ஸங்கங் ஸரணங் கச்சாமி

துதியம்பி புத்தங் ஸரணங் கச்சாமி
துதியம்பி தம்மங் ஸரணங் கச்சாமி
துதியம்பி ஸங்கங் ஸரணங் கச்சாமி

ததியம்பி புத்தங் ஸரணங் கச்சாமி
ததியம்பி தம்மங் ஸரணங் கச்சாமி
ததியம்பி ஸங்கங் ஸரணங் கச்சாமி

பாணாதிபாதா வேரமணீ ஸிக்காபதங் ஸமாதியாமி
அதின்னாதானா வேரமணீ ஸிக்காபதங் ஸமாதியாமி
காமேஸு மிச்சாசாரா வேரமணீ ஸிக்காபதங் ஸமாதி
[யாமி
முஸாவாதா வேரமணீ ஸிக்காபதங் ஸமாதியாமி
ஸுராமேரய மஜ்ஜ பமா தட்டானா வேரமணீ ஸிக்கா
[பதங் ஸமாதியாமி

புத்தர்

"பொருந்து போதியில்
இருந்த மாதவர்
திருந்து சேவடி
மருந்தும் ஆகுமே"

(வீரசோழியம்)

புத்தர் என்றால் போதியை அடையப் பெற்றவர் என்பது பொருள். போதி என்றால் ஞானமும் ஒழுக்கமும் முதிர்ச்சி யடைந்த உயர்ந்த நிலை. இந்த உயர்ந்த நிலையை மானிட முயற்சியினால் எல்லோரும் அடையலாம். போதி மூன்று வகைப்படும். அவை, புத்த போதி, பச்சேக (பிரத்யேக) போதி, அரஹந்த போதி என்பவை. அரஹந்த போதி யடைவதற்குப் பத்து விதமான பாரமிதைகளை ஒரு லக்ஷ கல்ப காலம் பூர்த்தி செய்ய வேண்டும். பத்துவிதமான பாரமிதைகள் எவை என்றால்,

"தானங் ஸீலஞ்ச நெக்கம்மங்
பஞ்ஞா விரியேன பஞ்சமங்
கந்தி ஸச்சு மதிட்டானங்
மெத்து பெக்காதிமே தஸ"

(புத்தவம்ஸ)

என்றபடி, தானம், ஸீலம், நைஷ்கர்ம்மியம், பிரக்ஞா, வீரியம், க்ஷாந்தி, ஸத்தியம், அதிஷ்டானம், மைத்ரீ, உபேக்ஷை என்பனவாம். சாரீபுத்திரர், மௌத்கல்

யானர் முதலானவர்கள் இந்த அரஹந்த போதியை அடைந்தவர்கள். அரஹந்த போதிக்கு ஸ்ராவக போதி என்றும் பெயர் உண்டு.

பச்சேக போதி அடைவதற்கு இரண்டு லக்ஷ கல்ப காலம் மேலே சொன்ன பத்து பாரமீதர்மங்களை (பாரமிதைகளை)ச் செய்ய வேண்டும். உலகத்திலே புத்தர்கள் இல்லாத காலங்களில், பச்சேக (பிரத்யேக) புத்தர்கள் தோன்றி கிலேசத்தை ஜெயித்து இருப்பார்கள். பகவான் கௌதம புத்தர் உலகத்திலே தோன்றுவதற்கு முன்பு, அநேக பச்சேக புத்தர்கள் இஸிகிரி பர்வதத்தில் இருந்தார்கள். பிம்பிசார அரசனுடைய புத்திரன் அஜாத சத்துரு, வருங் காலத்திலே **விதிதவிஷேஷர்** என்னும் பெயருள்ள பச்சேக புத்தராக வருவார். பகவான் கௌதம புத்தருக்கு விரோதமாக வேலை செய்த தேவதத்தன், வருங் காலத்திலே **ஸட்டிஸ்ஸரர்** என்னும் பெயருடைய பச்சேக புத்தராக வருவார்.

புத்தபோதியை அடைய விரும்புகிறவர்கள் நான்கு லக்ஷ கல்பகாலம் வரையில் பாரமிதைகளைச் செய்யவேண்டும். புத்தர் ஒருவர், ஒருவரைப்பார்த்து இவர் இந்தக் காலத்திலே இந்தப் பெயருடன்

போதியை யடைவார் என்று நியமித்துச் சொன்னால்; அதற்கு நியதவிவரணம் என்பது பெயர். கௌதமபுத்தருக்குத் தீபங்கர புத்தர் காலத்திலே நியதவிவரணங் கிடைத்தது.

புத்தபோதிக்காக நியதவிவரணம் பெறுவதற்கு முன்பேயும், **மனோப்ரநிதானம், வாக்ப்ரநிதானம்** என்பவைகளைச் சில கல்பகாலம் வரையில் செய்யவேண்டியது அவசியமாகும். மனோப்ரநிதானம் என்றால், ஒருவர் ஒரு புத்தரைப் பார்த்தால், தானும் அவரைப் போல எப்பொழுதாவது புத்தர் ஆகவேண்டுமென்று உறுதியாக நினைத்தல். வாக்ப்ரநிதானம் என்றால், ஒருவர் ஒரு புத்தரைப் பார்க்கும் போது அவரை மெச்சி, சமயோசிதமாகப் புண்ணிய கர்மங்களைச் செய்து, தானும் எப்போதாவது ஒருகாலத்தில் புத்தராக வேண்டும் என்று அந்தப் புத்தரிடம் சொல்லுதல். அப்போது, அந்தப் புத்தர், உன்னாலேயும் புத்தபதவி யடைய முடியும் என்று கூறுவார். ஆனால், கால நியமனம் கூறமாட்டார். புத்த போதியை விரும்பினவர்களுக்குப் **போதிசத்வர்** என்று பெயர். புத்த ஞானபதவியை அடைந்த பிறகு **புத்தர்**, அல்லது **ஸம்புத்தர்** என்று பெயர் பெறுவர்.

நமது கௌதம போதிசத்வர், மேலே சொன்ன வாறு, மனோப்ரநிதானம் ஏழுலக்ஷ கல்பகாலங்கள் செய்தார். (ஏழுலக்ஷ கல்பகாலங்கள் மனத்தினால் புத்தபோதியை விரும்பினார்.) வாக்ப்ரநிதானத்தை ஒன்பது லக்ஷ கல்பகாலம் பூர்த்தி செய்தார். (அதாவது, நானும் புத்தராகவேண்டும். என்று புத்தரிடம் சொல்லிக்கொண்டே விரும்பினார்.)

கடைசியில், தீபங்கர புத்தர் காலத்திலே, கௌதம போதிசத்வர் ஸுமேதர் என்ற தாபசனாக இருந்தார். இவர் தீபங்கர புத்தரிடம் சென்று வணங்கி, "நானும் புத்தராக விரும்புகிறேன்" என்று சொல்ல, அதைக்கேட்ட தீபங்கரபுத்தர் இவ்வாறு கூறினார்; "நீர் இன்று தொடங்கி நான்கு லக்ஷ கல்ப காலத்திற்குப் பிறகு, இக்ஷ்வாகு குலத்திலே பிறந்து, சித்தார்த்த கௌதமர் என்று பெயர் கொண்டு புத்த போதியை யடைவீர்." என்று உறுதியாகக் கூறினார். இவ்வாறு கூறுவதற்கு நியதவிவரணம் என்று பெயர். இந்த நியத விவரணம் பெற்ற காலத்திலிருந்து, பகவான் கௌதம புத்தர், மேலே சொன்ன பத்து விதமான பாரமிதைகளைப் பூர்த்தி பண்ணினார்.

பகவான் கௌதம புத்தர் 2574 ஆண்டுகளுக்கு முன்னே (கலியுக வருஷம் 2478) சுத்தோதன அரசருக்கு மகனாகப் பிறந்தார். அரச குமாரனுக்குரிய எல்லா சுக போகங்களையும் அவர் பெற்றிருந்தார். அவர் ஒரு அழகான அரச குமாரியைத் திருமணம் செய்து கொண்டு அரண்மனையில் எல்லாவிதமான இன்ப சுகங்களையும் அனுபவித்துவந்தார். கடைசியில், உலக வாழ்க்கையின் உண்மையான இயல்பை அறிந்துகொள்ள வேண்டுமென்று தீர்மானித்தார். நிலையற்றதும், சிறிது காலத்துக்கு மட்டும் இருக்கக் கூடியதுமான இந்த அற்ப உலக இன்பத்தின் இயல்பை நன்குணர்ந்து, நிலைபெற்றதான உயர்ந்த இன்பத்தைத் தேடிக் கண்டு பிடிக்க அவர் முயற்சி செய்தார். அரசபோகம், இன்பவாழ்க்கை, மனைவி, ஒரே குழந்தை இவர்களை எல்லாம் துறந்து விட்டு வெளியே வந்தார். அவர் பல ஞானிகளிடம் சென்று, உண்மையான இன்பத்தைக் கண்டறிய வேண்டும் என்னும் தமது எண்ணத்தைப் பூர்த்தி செய்ய, அவர்களைப் போலவே தாமும் உடம்பை வாட்டி ஒடுக்கிக் கடுமையான தபசுகளைச் செய்தார். ஆனால், அவருக்கு உண்மைப் பொருள் காணப்படவில்லை. அவ்விதக் கடுமையான தபசுகள் பயனற்றவை

என்று கண்டவுடன் அவர் அவைகளை விட்டுத் தமது முயற்சியினாலும் சுய அறிவினாலும் பழைய காலத்தில் செய்த பாரமிதைகளினாலும் மெய்ஞ்ஞானத்தையும் நிலைபேறுள்ள உண்மைத் தத்துவத்தையும் கண்டறிந்தார். மெய்ஞ்ஞானம் அடைந்து புத்தரான பிறகு மக்கள் சமுதாயத்திற்கு உழைப்பதிலேயே தமது ஆயுட்காலம் முழுவதையும் கழித்து 45 ஆண்டுகளாகத் தொண்டாற்றி வந்தார். ஏழை பணக்காரன் என்னும் வேற்றுமை யின்றி எல்லோருக்கும் அவர் உபதேசித்தார். மக்கள்படும் துன்பங்களைக் கண்டு மனம் இரங்கிய அவர் தமது வாழ்நாள் முழுவதும் இரவும் பகலுமாக உழைத்து மக்களை நல்வழியில் நடத்திச் சென்றார். துக்கப் படும் ஏழை ஒருவர் எங்கே னு மி ரு ந் தா ல் அவருக்கு ஆறுதல் கூறித் தேற்றுவதற்காக நூற்றுக் கணக்கான காதவழிகளைக் கால் நடையாகவே நடந்து சென்றார். நோயாளிகளை உபசரித்து அவருக்கு உதவி செய்தார். ஜாதி பேதம், வகுப்பு பேதம் இல்லாமல் தமது பிக்ஷு சங்கத்தில் தோட்டி முதல் தொண்டமான் வரையில் எல்லோரையும் சேர்த்து வந்தார். ஒரு தேசத்து அரசர் மற்றொரு தேசத்தரசரோடு போர் செய்வதைத் தடுத்துச் சமாதானப் படுத்தினார். மௌடிக ஜனங்களுக்கும் அவர் போதித்தார்; அறிஞர்

களின் ஐயப்பாடுகளையும் அவர் நீக்கினார். இத்தகைய அழகான வாழ்க்கையை, தூய்மையான உள்ளத்தை, ஆழ்ந்த அறிவு படைத்த மனத்தை, கவர்ச்சியுள்ள ஒரு உருவத்தை, சுயநலமின்றி உழைத்த ஊழியத்தை புத்த பகவானிடத்தில் தவிர வேறு யாரிடத்திலும் காணமுடியாது.

புத்தர் என்றால் கடவுள் என்றாவது மனித ஆற்ற லுக்கு மேற்பட்ட தெய்வம் என்றாவது நினைக்காதீர் கள். புத்தர், மனிதனாக இருந்து மேலான நிலையை யடைந்த ஒருவர் ஆவர். புத்த நிலையை யடைவதற்கு அவர் பத்துப் பாரமிதைகளைச் செய்ய வேண்டியிருந் தது. (பத்துப் பாரமிதைகள் மேலே கூறப்பட்டன.) அறிய வேண்டிய உண்மைகளை எல்லாம் அறிந்தவரும், வாழ்க்கையில் உண்டாகும் எல்லா குற்றங்களையும் நீக்கி யவரும் ஞானமடைதற்குரிய எல்லா நற்குணங்களையும் வளர்த்துக்கொண்டவரும் யாரோ, அவர்தான் புத்தர் என்று சொல்லப்படுவார். ஆகையால், ஆத்யாத்மிகம், பாஹிரம் என்னும் இரண்டினையும், நிர்வாணம் என்ப தையும் அறிந்தவர் புத்தர். உயிரை அசுத்தப்படுத்தும் தீமைகள் எல்லாவற்றையும் அழிப்பதற்காக ஆசை, கோபம், மோஹம், பகை, தீயஎண்ணங்கள், பேதமை

இவைகளின் வேர்களை அவர் பிடுங்கி எறிந்தார். ஐம் புலன்களால் அனுபவிக்கப்படும் ஐந்து காம குணங்களை யும், பற்றுக்களையும், நான்கு பரம தத்துவங்களுக்கு மாறுபட்டதான அஞ்ஞானத்தையும் அவர் ஒழித்தார். உலகத்தோடு மனிதனைப் பிணைத்துக்கட்டும் பத்துவித விலங்குகளை (தஸ ஸம்யோஜனங்களை) அவர் முறித் தெறிந்தார். போதியை யடையும் ஞானத்தை வளர்ப் பதற்காக ஏழு வகை விசுத்திகளைக் கடந்து உயிரின் உண்மை இயல்பு, அநித்யம், துக்கம், அநாத்மம் இவை களை அறிந்தார். புத்தருக்கு ஒன்பது விதமான மகா குணங்கள் கூறப்படுகின்றன. அவை: வாழ்க்கையில் பரிசுத்தமானவர்; தமது முயற்சியினாலேயே புத்தத் தன்மையைப் பெற்றவர்; எல்லாவிதமான ஞானத்தை யும் உயர்ந்த குணங்களையும் அடையப் பெற்றவர்; சுகத தன்மை உடையவர் உலக இயற்கையின் உண்மையான தத்வத்தை ஆழ்ந்து உணர்ந்தவர்; பற்றுக்களை அடி யோடு விட்டவர்; மனிதருக்கும் தேவர்களுக்கும் குரு வாக உள்ளவர்; நான்கு பரம தத்துவங்களைப் போதித்த வர்; துக்கங்களை ஒழித்தவர். இக்குணங்களை உடையவர் யாரோ, அவரே புத்தர் ஆவார்.

மனிதர் எல்லோரும் இவ்வாறு நடந்து தமது முயற்சியினால் புத்தத் தன்மையை யடையக்கூடும்.

தம்மால் அடையப்பெற்ற மிக உண்மை நிலையை, எல்லோரும் அடைய வழிகாட்டுவது குருவாகிய இவரது தனி இயல்பு. நிர்வாணமாகிய மோக்ஷத்தை யடைவதற்கு எல்லோரும் புத்தர் ஆகவேண்டும் என்பதில்லை. வீடாகிய நிர்வாணம் இன்னது என்பதைத் தெரிந்து கொள்ளவேண்டுமானால், அதை அடையும் வழியைப் பார்த்துத் தெரிந்து கொள்ளலாம். இந்த வழியைக் காட்ட புத்தர் உலகத்தில் தோன்றி எட்டுப் பரமவழிகளைக் காட்டி யுள்ளார். அந்த எட்டு வழிகள் எவை என்றால், ஸம்யக் திருஷ்டி, ஸம்யக் சங்கல்பம், ஸம்யக் வசனங்கள், ஸம்யக் கர்மம், ஸம்யக் ஆஜீவம், ஸம்யக் வியாயாமம், ஸம்யக் ஸதி, ஸம்யக் சமாதி என்பவை. இந்தஎட்டு வழிகளும் மக்களுக்கு அளிக்கப்பட்ட வரங்களில் மிக உயர்ந்தவை. இவை, மனத்தை அடக்கி உள்ளத்தைப் பயிற்சி செய்வதைக் கொண்டுள்ளன. இந்தத் தத்துவ போதனை ஆதியில் புத்தரிடமிருந்து, அவரது பலமுள்ளதும் அசாதாரணமானதுமான நான்கு வகை அறிவுகளால் உண்டாயிற்று. இந்த நான்கு ஞானம் எவை என்றால்; புத்தருடைய போதியை ஒருவரும் மறுக்க முடியாது. மோக்ஷம், சுவர்க்கம் இவைகளை யடைய பாவச் செய்கைகள் பாதகமானவை என்று புத்தர் சொன்னதை

மறுக்க முடியாது. உலகத்தில் எல்லாம் துன்பம் உடையன என்னும் போதனையை ஒருவரும் மறுக்க முடியாது. புத்தர் போதித்தவை நிர்வாணமாகிய மோக்ஷத்திற்கு வழியாகும் என்பதை ஒருவரும் மறுக்கமுடியாது என்பவை. ஒரு புத்தருடைய குணாதிசயங்களை விவரிக்க மற்றொரு புத்தரால்தான் முடியும். அவருடைய ஞானத்தை விளக்கிக் கூறுவதென்றால் பல புத்தகங்கள் எழுதலாம். புத்தருடைய பத்து ஞான பலன்களைக் கூறுகிறேன். அவர் கர்மங்களின் பலன்களை அறிவார். எல்லாப் பொருள்களின் இயல்பையும் காரணங்களையும் அவர் அறிவார். பொருள்களின் தோற்றம், நிலைபேறு, அழிவு இவைகளைப் பற்றி அவர் மிக நன்றாக அறிவார். ஒவ்வொருவருடைய தனிப்பட்ட எண்ணங்களை நன்றாக அறிந்தார். மனோ தத்துவத்தின் உயர்ந்த ஞானத்தை அவர் பெற்றிருந்தார். முற்பிறப்புச் செய்திகளை அறியும் ஆற்றலைப் பெற்றிருந்தார். மனிதக் கண்களால் பார்க்க முடியாதவற்றையும் அவர் கண்டார். மிக உயர்ந்த புனிதமான ஞானத்தை அவர் பெற்றிருந்தார்.

O14:33
N57

புத்த பகவானுடைய குணங்களையும், ஆற்றல்களையும், ஞானத்தையும், உயர்ந்த இயல்புகளையும்,

68789

நினைக்கும்போது உலகத்துக்குப் போதிக்க அவரைத் தவிர வேறு ஒருவரும் தகுதியுடையவர் அல்லர் என்பது தெரிகிறது. அவருடைய போதனைகள் சூரிய வெளிச்சம் போன்றவை. அவரது போதனைகள் மனத்திற்கு ஊக்கத்தை உண்டாக்குகின்றன. இருளைப் போக்குகின்றன. உள்ளத்தைத் தூய்மைப் படுத்துகின்றன. எல்லாரிடத்திலும் ஒரே விதமாகப் பிரகாசிக்கின்றன.

நன்மையை விரும்புவோர், புத்தரது வாழ்க்கையைக் கௌரவப்படுத்திப் போற்றுகிறார்கள். ஞானத்தை விரும்புவோர், புத்த பகவானது போதனைகளை அனுபவிக்கிறார்கள். மதத்தை விரும்புகிறவர் புத்த பகவானது சுதந்திர ஞானத்தை வியக்கிறார்கள். துக்கத்தில் ஆழ்ந்துள்ள மக்களுக்கு அவர் ஒருவரே அடைக்கலமாக இருக்கிறார். ஆகையால், பேராசிரியர்களுக்கெல்லாம் பேராசிரியரும், மிக மேலான போதத்தைக் கைவரப் பெற்றவரும், களங்கமற்ற தூய வாழ்க்கையைப் போதிக்கும் சற்குருவானவரும், மக்களை நல் வழியில் செல்ல வழி காட்டும் அறிவிற் சிறந்த தலைவரும் ஆன அவருக்கு எல்லாவித வணக்கமும் உரியதாகும்.

பகவான் புத்தரை எப்படி கௌரவப் படுத்த வேண்டும் என்று கேட்ட போது, 'என்னுடைய போதனைப் படி நடப்பதே என்னைக் கௌரவப் படுத்துவதாகும்' என்று அவர் சொன்னார். ஆகையால் பௌத்தராகிய நாம் அவ்விதமே அவரைக் கௌரவப்படுத்த நினைவு கொள்வோமாக. பௌத்தர் அல்லாதவர்களும் புத்தர் போதித்தவற்றைத் தெரிந்துகொள்வதனால் தவறு ஒன்றும் இல்லை; நன்மையே உண்டாகும்.

"ஸப்ப பாபஸ்ஸ அகரணங்
குஸலஸ்ஸ உபஸம்பதா
ஸசித்த பரியோதபனங்
ஏதங் புத்தான ஸாஸனங்
(தம்மபத)

முற்றிற்று

பாரமீ தர்மங்கள் பத்து

"தானஞ்சீலமும் பொறை தக்காதாய வீரியம்
ஊனமில் தியானமே யுணர்ச்சியோடு பாய்மும்
மானமில் லருளினை வைத்தலே வலிமையும்
ஞானமீரைம் பாரமிதை நாடுங்கா லிவைகளும்"
(நீலகேசி)

அந்தப் பத்து; பாரமீ, உபபாரமீ, பரமார்த்த பாரமீ என்று முப்பதாகும்.

அருணெறியாற் பாரமிதை யறைந்து முடனடக்கிப்
பொருண் முழுதும் போதிநிழ லன்குணர்ந்த முனி வரன்றன்
அருண் மொழியா னல்வாய்மை யறிந்தவரே பிறப் பறுப்பார்
மருணெறியாற் பிறநூறு மயக்கறுக்கு மாருளரோ
(சித்தாந்தத் தொகை)

தீவினை, நல்வினை பயன்

"மக்களும் தேவரும் பிரமரு நரகரும்
தொக்க விலங்கும் பேயுமென்றே
நல்வினை தீவினை யென்றிரு வகையாற்
சொல்லப் பட்ட கருவிற் சார்தலும்"
(மணிமேகலை

தீவினை

தீவினை யென்பதி யாதென வினவின்
ஆய்தொடி நல்லா யாங்கது கேளாய்
கொலையே களவே காமத் தீவிழை
வுலையா வுடம்பிற் றோன்றுவ மூன்றும்
பொய்யே குறளை கடுஞ்சொல் பயனில்
சொல்லெனச் சொல்லிற் றோன்றுவ நான்கும்
வெஃகல் வெகுளல் பொல்லாக் காட்சியென்
றுள்ளந் தன்னி லுருப்பன மூன்றுமெனப்
பத்து வகையால்"

(மணிமேகலை)

நல்வினை

சொல்லிய பத்தின் றொகுதியி னீங்கிச்
சீலந் தாங்கித் தானந் தலைநின்று
மேலென வகுத்த வொரு மூன்று திறத்துத்
தேவரு மக்களும் பிரமரு மாகி
மேவிய மகிழ்ச்சி வினைப்பய னுண்குவர்

(மணிமேகலை)

"தோடார் இலங்கு மலர்கோதி வண்டு
வரிபாட நீடு துணர் சேர்
வாடாதபோதி நெறிநீழல் மேய
வரதன் பயந்த அறநூல்
கோடாத சீல விதமேவி வாய்மை
குணனாக நாளும் முயல்வார்
வீடாத இன்ப நெறி சேர்வர்; துன்ப
வினை சேர்தல் நாளும் இலரே"
(வீரசோழிய உரை.)

ஆர்ய அஷ்டாங்க மார்க்கம்

" நற்காட்சி நல்லொழுக்க நல்வாய்மை நல்வாழ்க்கை
நற் செய்கை யோடைந்து நாடு."
" நன்முயற்சி நன்காங் கடைப்பிடி நல்லோர் தம்பாற்
செல்கையுட னட்டனைத்துங் தேறு"

சத்த - மானவக - காதா

யோவததங் பவரோ மநுஜேஸு
சக்யமுநீ பகவா கதகிச்சோ
பாரகதோ பல விரிய ஸமங்கீ
தங்ஸுகதங் ஸரணத்த முபேமி

ராக விராக மநேஜ மஸோகங்
தம்ம மசங்கத மப்படி கூலங்
மதுர மிமங் பகுணங் ஸுவிபத்தங்
தம்ம மிமங் ஸரணத்த முபேமி

யத்தச தின்ன மஹப்பல மாஹு
சதுஸு சுசீஸு புரிசயுகேஸு
அட்டச புக்கல தம்மதசாதே
ஸங்க மிமங் ஸரணத்த முபேமி

இந்தச் செய்யுள்கள் **சத்த** என்னும் ஒரு வாலிபனுக்குப் பகவான் புத்தராலே இயற்றிக் கொடுக்கப் பட்டன. தற்காலத்தில், பௌத்தப் பாடசாலைகளிலே பாடம் முடிந்த பிறகு சாயங்காலங்களிலும் இவை ஓதப்படுகின்றன.

ஜய மங்கல காதா

இந்தப் பாலி செய்யுள்கள் நீண்ட காலமாக பௌத்தத் தேசங்களிலே உபயோகிக்கப்பட்டு வருகின்றன. பௌத்தப் பள்ளிக்கூடங்களில், பாடசாலை தொடங்குகிறதற்கு முன்பு, இந்தக் காதைகள் தினந் தோறும் பாராயணம் செய்யப்படுகின்றன.

1. பாஹூங் ஸஹஸ்ஸ மபி நிம்மிதஸாயுதந்தங்
கிரிமேகலங் உதித கோர ஸஸேன மாரங்
தாநாதிதம்ம விதிநா ஜிதவா முனிந்தோ
தங் தேஜஸா பவது தே ஜயமங்கலானி

2. மாராதிரேக மபி யுஜ்ஜித ஸப்பரத்திங்
கோரம்பனாலவகமக்க மதத்த யக்கங்
கந்தீ ஸூதந்த விதிநா ஜிதவா முனிந்தோ
தங் தேஜஸா பவது தே ஜயமங்கலானி

3. நாலாகிரிங் கஜவரங் அதிமத்தபூதங்
தாவக்கி சக்கமஸநீவ ஸூதாருநந்தங்
மெத்தம்புஸேக விதிநா ஜிதவா முனிந்தோ
தங் தேஜஸா பவது தே ஜயமங்கலானி

4. உக்கித்த கக்கமதிஹத்த ஸுதாருண்ந்தங்
தாவந்தி யோஜன பதங்குலிமாலவந்தங்
இத்தீபி ஸங்கத மனோ ஜிதவா முனிந்தோ
தங்தேஜஸா பவது தே ஜய மங்கலானி

5. கத்வான கட்ட முதரங் இவ கப்பினீயா
சிஞ்சாய துட்ட வசனங் ஜனகாய மஜ்ஜே
ஸந்தேன ஸோம விதினா ஜிதவா முநிந்தோ
தங் தேஜஸா பவது தே ஜயமங்கலானி

6. ஸச்சங் விஹாய மதி ஸச்சகவாத கேதுங்
வாதாபிரோ பிதமனங் அதி அந்தபூதங்
பஞ்ஞாபதீப ஜலிதோ ஜிதவா முனிந்தோ
தங் தேஜஸா பவது தே ஜயமங்கலானி

7. நந்தோபனந்த புஜகங் விபுதங் மஹித்திங்
புத்தேன தேர புஜகேன தமாபயந்தோ
இத்தூப தேஸ விதினா ஜிதவா முனிந்தோ
தங் தேஜஸா பவது தே ஜயமங்கலானி

8. துக்காஹ திட்டி புஜகேன ஸுதட்டஹத்தங்
ப்ரஹ்மங் விஸுத்திஜுதிமித்தி பகாபிதானங்
ஞாணகதேன விதிணு ஜிதவா முனிந்தோ
தங் தேஜஸா பவது தே ஜய மங்கலானீ

9. எதாபி புத்த ஜயமங்கல அட்ட காதா
யோ வாசகோ தினதினே ஸரதே மதந்தி
ஹித்வான நேக விவிதானி சுபத்தவானி
மொக்கங் ஸுகங் அதிகமெய்ய நரோ
ஸபஞ்ஞோ

English Books on Buddhism

1.	**The Light of Asia**— *by Sir Edwin Arnold*	3	4	0
2.	**Buddhism for Everybody**— *by Bhikkhu J. Kaspap, M.A.*	1	8	0
3.	**Buddhism in Translation**— *by H. C. Warren*	15	0	0
4.	**Buddhist Shrines in India**— *by Devapriya Valisinha, B. A.*	5	0	0
5.	**Essence of Buddhism**— *by P. Lakshmi Narasu, B. A.*	12	8	0
6.	**What is Buddhism**— ,, ,,	1	8	0
7.	**Buddhaghosa**—*by Dr. B. C. Law*	6	8	0
8.	**Psychology of Progress** — *by Anagarika Dharmapala*	0	12	0
9.	**Pali-English Dictionary (Pali Text Society)**	98	0	0
10.	**Asoka**—*by Bhikkhu Metteyya*	0	8	0
11.	**Early Buddhist Scriptures**— *by E. J. Thomas*	7	8	0

Maha Bodhi Book Agency

4-A, Bankim Chatterjee Street,

CALCUTTA 12.

बुद्ध-धर्म की हिन्दी किताबें

१. **दीघनिकाय**—महापण्डित राहुल सांकृत्यायन	५	८	०
२. **बुद्धवचन**—भदन्त आनन्द कौसल्यायन	०	८	०
३. **सरल पालि शिक्षा**—भिक्षु सद्धातिस्स	१	८	०
४. **बौद्ध तत्व की कुछ बातें**—भिक्षु सोमानन्द	०	४	०
५. **सुत्त निपात**—भिक्षु धर्मरत्न	१	०	०
६. **बौद्ध शिशुबोध**—भिक्षु धर्मरक्षित	०	४	०
७. **पालि महा व्याकरण**—भिक्षु जगदीश काश्यप	५	८	०
८. **भगवान् बुद्ध की शिक्षा**—श्री देवमित्त धर्मपाल	१	१	०
९. **बोधिद्रुम (कविता)**—सुमन वात्स्यायन	०	६	०
१०. **यशोधरा**—मैथिलीशरण गुप्त	१	१०	०
११. **अशोक**—भगवती प्रसाद पांथरी	४	०	०

प्राप्ति—स्थान :

महाबोधि पुस्तक भण्डार,

सारनाथ, बनारस।

TAMIL BOOKS ON BUDDHISM

Version of Rev. ***BHIKKHU N. SOMANANDA***

1. தம்மபதம்
   (*Dhamma Pada*) Rs. 2 0 0
   Pali Text in Tamil Script with Tamil Translation.

2. புத்தர்
   (*The Buddha*) 0 4 0

3. புத்த தர்ம சுருக்கம்
   (*Buddhism in a nut-shell*) 0 12 0

4. புத்த சரித்திரம்
   (*The Life of Buddha*) 1 0 0

Also PORTRAIT OF BUDDHA (in Tricolour), As. FOUR

Copies can be had of:

K. S. AIYAR'S (Book-Sellers & Publishers)
177, Royapettah High Road, Madras 14, India.

AND

MAHA BODHI BOOKSTALLS
at Colombo, Jaffna, Madras, Calcutta, Sarnath, etc.

Printed at Sri Ramachandra Printing Works, Madras 14.